

-- தாய்மொழி --

நேரம்:- 01 மணி

01. அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. ..... த் தொழிலுக்கு வந்தனை செய்வோம் (உலவு, உழவு)
2. ஆண்மானைக் .....என்றும் அழைப்பர் (கலை, களை)
3. எமது உடல் உறுப்புக்களில் .....பிரதானமானதாகும் (தலை, தளை)
4. நாம் மூன்று .....உணவு உண்ண வேண்டும் (வேலை, வேளை)
5. வானத்தின் நிறம் ..... ஆகும் (நீளம், நீலம்)

02. பின்வரும் சொற்களை உயர்திணையா ? அஃறிணையா ? என எழுதுக

1. அம்மா வந்தார் .....
2. மரம் அசைந்தது .....
3. தங்கை வாசித்தாள் .....
4. தேன் சுவையானது .....
5. கோயில் புனிதமானது .....
6. அதிபர் கூறினார் .....

03. வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க?

1.மக்கள் கூட்டமாகக் ..... (சென்றார்கள் / சென்றது)

2.வாசற்பூட்டு தொலைந்து ..... (போய்விட்டது / போய்விட்டன)

3.ஓடும் உதிரத்தில் - வடிந்து ..... கண்ணீரில்(ஒளுகும் / ஒழுகும்)

4.சிபி புறாவுகக் ..... கொடுத்தார்.

(அடைக்களம் / அடைக்கலம்)

5.கிளி ..... விட்டு பிரியாதிருந்தது. (மறத்தை, மரத்தை)

6.பனங்காட்டு நரி ..... அஞ்சாது. (சளசளப்புக்கு , சலசலப்புக்கு)

04. கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

1. பத்து ஆண்டுகள் முடிவில் நடாத்தப்படும் விழா. .....
2. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பவை. .....
3. அதிக பயன்கள் தரும் பனை மரத்தைக் குறிக்க உகந்த சொல்

.....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

05. பந்தியை வாசித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.

நாம் எதைப் படித்தாலும் கவனம் சிதறாமல் படிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்; திரும்பப் படிக்க வேண்டும்; திரும்பத் திரும்பப் படிக்க வேண்டும்; புரிந்து கொண்டு படிக்க வேண்டும்; நம்மால் நன்றாகப் படிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையுடன் படிக்க வேண்டும். அப்போது கடினமான செய்திகளைக்கூட எளிதில் நினைவில் பதிய வைக்க முடியும். நாம் ஏற்கனவே மனத்தில் பதிய வைத்துள்ள தகவல்களைத் திரும்பவும் நினைவுக்குக் கொண்டுவர வேண்டும். இதன் மூலம் அந்தத் தகவல் நம் மனத்தில் ஆழமாகப் பதிவதோடு மிக எளிதாக அதை நினைவுகூரவும் இயலும்.

1. ஞாபக சக்தியைக் கூட்டுவதற்கு செய்ய வேண்டியது.

1. மனதில் பதிந்தவற்றை மீள மீள நினைத்தல்.
2. கவனம் சிதறாமல் படித்தல்.
3. தன்னம்பிக்கையுடன் இருத்தல்.

2. கடினமான விடயத்தையும் இலகுவாக்க உகந்த வழி

1. மீள மீள நினைவு கூரல்.
2. தன்னம்பிக்கையோடு புரிந்து கொள்ளல்.
3. கவனம் சிதறாமல் கற்றல்.

06. தொடக்கத்தில் தரப்பட்டுள்ள சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01) சிலை : 1. ஓவியம் 2. காவியம் 3. உருவம் 4. வடிவம்

02) எச்சரிக்கை : 1. ஆபத்து 2. அறிவிப்பு 3. இடர் 4. துன்பம்

03) சந்தேகம் : 1. ஐயம் 2. குற்றம் 3. தவறு 4. எண்ணம்

07. பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துக்களில் உள்ள சொல்லின் கருத்தைப் புள்ளிக் கோட்டின்மீது எழுதுக.

01) கிராம மக்களின் **ஒத்துழைப்பால்** தான் கொள்ளைக்காரர்கள் பிடிபட்டார்கள்.

.....

02) வீட்டை வாங்க **ஒப்பந்தம்** செய்து கொண்டோம்.

.....

03) இறைவன் **கருணையே** வடிவமானவர்.

.....

08. சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. பனை, தென்னையின் இளங்காய் குரும்பை என்பது போல மா, பலாவின் இளங்காயைக் குறிக்கும் சொல் யாது?

.....

2. பயறு, உழுந்து முதலியவற்றின் உள்ளீடு பருப்பு என்பது போல் பலாப்பழத்தின் உள்ளீட்டுப் பொருள் யாது?

.....

09. தரப்பட்ட வாக்கியங்களை வாசித்து இடைவெளியை நிரப்புவோம்

பாறைகள் சிதைவடைந்தன.

1. திணை .....
2. பால் .....
3. எண் .....
4. இடம் .....
5. காலம் .....

நான் பாடம் படித்தேன்.

1. திணை .....
2. பால் .....
3. எண் .....
4. இடம் .....
5. காலம் .....

10. பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.

1. காரிருள்.....
2. கடலோரம்.....
3. காலைக்காட்சி.....
4. புற்றரைகள்.....
5. வண்ணச்சிட்டு.....

11. பின்வருவனவற்றுள் திருத்தமான சொல்லை தெரிவு செய்க.

1.	அறிவிப்பாளர்,	அறிவிற்பாளர் ,	அரிவிப்பாளர்,
2.	அரிவியல் ,	அறிவியல் ,	அறிவியில்
3.	ஆராய்ச்சி,	ஆராச்ய்சி,	ஆராய்சி
4.	உரையாடல்,	உறையாடல்,	உரையால்
5.	கேள்வி,	கேல்வி ,	கேழ்வி

12. பின்வரும் ஓர் எழுத்துச் சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக.

1. துரத்திக் கொண்டே இருக்கும் எழுத்து. .....
2. அழைக்கும் எழுத்து .....
3. மாதம் ஒன்று .....
4. பசுவைக் குறிக்கும் எழுத்து .....
5. குதிரையைக் குறிப்பது .....
6. பேச உதவும் எழுத்து .....

13. பின்வரும் படச் சட்டகத்தைக் கொண்டு மூன்று வாக்கியம் எழுதுக? ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்குக் குறையாதவகையிலும், எழுவாய் பயனிலைத் தொடர்பு காணப்படும் வகையிலும் வாக்கியங்கள் இடம் பெறுதல் வேண்டும்.



1. .....

.....

2. .....

.....

3. .....

.....